முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.18/2021

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 03–02–2026.

பெயர் = ராதாகிருஷ்ணன்

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

தாவாச்சொத்தின் சர்வே எண்.பழைய எண்.268/2 புதிய எண்.268/11. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ல் உள்ள துவாரகநாத் என் அண்ணன், ராமகிருஷ்ணன் என் தம்பி. என் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் தாவாச்சொத்து சம்பந்தமாக பிரதிவாதியிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 என் பெயரிலும், என் சகோதரர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்து எனக்கு கிடைத்துவிட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் பாகப்பிரிவினை ஆவணத்தில் C செடியூலில் உள்ளது என கூறியுள்ளார். நான் சொல்வதுபோல் தாவாச்சொத்து அதில் உள்ளடங்கவில்லை நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5,6 ஆவணங்கள் வருவாய்த்துறை ஆவணங்கள் மேற்படி ஆவணங்களின்படி நான் உரிமைகோர இயலாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றாலும், பிரதிவாதிதான் அதனை அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.03 17:09:28 +0530